முருகப்பெருமான் துணை

**மகான் முருகநாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.11.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. மாதவ ஞான தேசிகனே
மக்களை காத்தருள வந்த
மாதவ ராஜனே அரங்கனே
மண்ணுலகில் உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது துலைதிங்கள்
குறைவிலா இருபானாற் திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 26 ம் நாள், 12.11.2023, ஞாயிற்றுக்கிழமை)
அறிவுரை ஆசி முருகநாயனாரும்
அருளுவேன் உலகநலம் பெற
3. நலம்பெற சுத்தசன்மார்க்க நெறி
ஞானமாக அரங்கன் வர
வலம்வர சூட்சும வடிவிலே
வணங்கி கலிவாழ் மக்கள்
4. மக்களெல்லாம் அரங்கா என
மண்ணுலகில் ஏற்று வர
ஆக்கமுடன் தீட்சை அடைந்து
அறநெறி மெய்நெறி கடைப்பிடிக்க
5. கடைப்பிடிக்க உலக மக்களுக்கு
கந்தப் பெருமான் காட்சி
தடையறக் கிட்டி இனிதே
தரணியில் ஞானவான்களாவர்
6. அவனியில் அரங்கன் வந்த
அவதார நோக்கம் பூர்த்திபட
புவனமெங்கும் தருமவான்கள்படை
புண்ணிய பலமிக்க படைகள் ஆக

7. ஆகவே பெருகி உலகமெல்லாம்
ஆன்மீக ஞான ஆட்சிபலம்
வகைபட அரங்கன் அவதார
வல்லமையால் அடைய நேரும்
8. நேருமை கொண்ட அதிகாரிகள்
நீதிமான்கள் ஆளுமைகளாக
தருமபலம் மிக்கவர்களுக்கே நல்ல
தரணியில் வாய்ப்பாக கிட்டி
9. கிட்டியே ஞான ஆட்சிகாலம்
குறைவிலா ஞான உலகமாக
தட்டாது மாற்றம் கண்டடையும்
தவசி அரங்கன் ஏற்றிய சோதிவழி
10. சோதிவழி சரவண சக்திபலம்
சுடராக உலகமெல்லாம் பரவி
ஆதிநாதன் ஆளுமை கொண்ட
அகிலமாக உலகம் மாறும்
11. மாறுதலை செய்யவே அரங்கனின்
மண்ணுலக அவதாரமும் இருக்க
ஆறுதல் கூட்டி உலகோர் வர
அற்புதம் சடுதிநிகழும் அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—